*17 09 2026 THURSDAY 7 15 PM* ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கிராமப் பகுதிகளின் மேம்பாட்டில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் பங்கு குறித்து ஆராயப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் கூறியுள்ளார்.

- டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம், செயல்திறன் மேம்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

- நாட்டின் ஜவுளி ஏற்றுமதி, கடந்த மாதத்தில் 29 ஆயிரத்து 700 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பாலஸ்தீன விடுதலை அமைப்பின் உறுப்பினர்கள் அமெரிக்கா வருவதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

- எகிப்து சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Chirag Duhan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<

கிராமப் பகுதிகளின் மேம்பாட்டில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் பங்கு குறித்து ஆராயப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் கூறியுள்ளார்

புதுதில்லியில் நடைபெற்ற இதுதொடர்பான தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, கிராம மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருவதாக கூறினார்.

இந்த திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மாவட்டங்களில் இத்திட்டத்தின் செலவினங்களில் 60 சதவீதம் ஊதியத்திற்கும், 40 சதவீதம் கட்டுமான பொருட்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் தெரிவித்தார்.

>>>>>>><<<<<

ஹைதராபாத் போன்ற மாகாணங்களை இந்தியாவுடன் இணைப்பதில் சர்தார் Vallabhbhai Patel-ன் பங்கு இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஹைதராபாத் சுதந்திர இந்தியாவுடன் இணைந்த நாளை கொண்டாடும் வகையில் தெலங்கானா மாநிலம், செகந்திராபாதில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

தேசத்தின் ஒற்றுமை என்பது, மாகாணங்களை இணைப்பது மட்டுமின்றி, ஒவ்வொரு குடிமகனுக்கும் சமஉரிமையை வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஹைதராபாத் மாகாணத்தை இணைப்பதில் மத்திய பாதுகாப்பு படையினரின் பங்கை திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தெலங்கானா ஆளுநர் திரு. *Shiv Pratap Shukla*, நாட்டின் சுதந்திரத்திற்கு 13 மாதங்களுக்குப் பிறகு ஹைதராபாத் மாகாணம் இணைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி பேசும்போது, நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை பேணிக் காப்பதற்கு மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், உள்துறை இணையமைச்சர் திரு. *Bandi Sanjay Kumar* உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொதுசேவையை போற்றும் விதமாக, பிஜேபி சார்பில் இல்லங்கள் தோறும் இன்று தீபம் ஏற்றப்பட்டது.

மத்தியப்பிரதேச மாநிலம், உஜ்ஜைனியில் *Shipra* ஆற்றின் படித்துறையில் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட தீபங்கள் ஏற்றப்பட்டன.

சென்னையில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தீபங்கள் ஏற்றப்பட்டன.

>>>>>>><<<<<

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பட்டயப் படிப்பு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 6 மாத கால பட்டயப் படிப்பை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இளங்கலை ஆசிரியர் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கு இது கூடுதல் தகுதியாக அமையும் என்று கூறினார்.

தேசிய திறந்தவெளி பள்ளிக் கல்விக் கழகம் சார்பில் இந்த பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் படிப்பில் சேருவதற்கு தேசிய திறந்தவெளி பள்ளிக் கல்விக் கழகத்தின் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

>>>>>>><<<<<

டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம், செயல்திறன் மேம்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் திறன், நவீன தொழில்நுட்பம் மூலம் மேம்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கனிமவளங்களை வெட்டி எடுத்தல் தொடர்பான இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பான *FICCI*-யின் அறிக்கையை டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டார்.

>>>>>>><<<<<

நாட்டின் ஜவுளி ஏற்றுமதி, கடந்த மாதத்தில் 29 ஆயிரத்து 700 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தை விட 16 சதவீதம் ஜவுளி ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் இந்திய ஜவுளிகளுக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளதை அடுத்து, ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<

பூட்டானுடன் இணைந்து, இருநாட்டு யுபிஐ பணப்பரிவர்த்தனை தொடங்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பூட்டான் தலைநகர் திம்புவில் சர்வதேச யுபிஐ பணப்பரிவர்த்தனை திட்டத்தை அந்நாட்டு பிரதமர் திரு. *Tshering Tobgay*-யுடன் இணைந்து தொடங்கி வைத்துப் பேசிய அவர், இதன்மூலம் இருநாட்டு மக்களும் பயனடைவர் என்று கூறினார்.

>>>>>>><<<<<

வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில், கேரளம் மாநில முன்னாள் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் திரு. *Tomin Thanchankary*-க்கு, 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த கோட்டயம் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு. கே.வி. ரஜனிஷ், அவருக்கு 30 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2003-ம் ஆண்டு முதல் 2007-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், திரு. Tomin Thanchankary, தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி 64 லட்சம் ரூபாய் அளவிற்கு சொத்து சேர்த்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில், காவல்துறையினரால் தேடப்பட்டு வந்த நக்சலைட்டு இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகியான ஆசிம் மண்டல் என்கிற ஆகாஷ் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாநில காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படையினர் இன்று அதிகாலை மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது, Purba Medinipur மாவட்டத்திற்குட்பட்ட Lalat பகுதியில், ஆசிம் மண்டல் கைது செய்யப்பட்டுள்ளதாக, காவல்துறையினர் தெரவித்துள்ளனர்.

பழங்குடியினர் நலன் தொடர்பான லால்கர் போராட்டத்தில் தொடர்புடைய ஆசிம் மண்டலை பற்றி தகவல் அளிப்போருக்கு, ஒரு கோடி ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, ஆசிம் மண்டல் கைது குறித்து, அம்மாநில முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நக்சலைட்டுகளை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் உறுப்பு நாடுகள், சர்வதேச சட்டங்களை மீறுவதாக ஐ.நா பொதுச் செயலாளர் திரு. அண்டோனியோ குட்டரஸ் கவலை தெரிவித்துள்ளார்.

ஐ.நா-வில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15 உறுப்பு நாடுகள் கொண்ட பாதுகாப்பு கவுன்சிலை மாற்றியமைப்பதற்கு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

மாறிவரும் சர்வதேச சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை கொண்டு வருவது அவசியம் என்று திரு. அண்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் உறுப்பினர்கள் அமெரிக்கா வருவதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்படும் ஏன்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவு அமைச்சகம், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், இந்த அமைப்புக்கான விசா கட்டுப்பாடுகளை நீட்டிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையேயான பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்தில் எழுப்பியதாக இந்த அமைப்பு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த தடை காரணமாக, பாலஸ்தீன அதிபர் Mahmoud Abbas, நியூயார்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

யுக்ரைன் தலைநகர் Kyiv-ல் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்தனர்.

Kyiv நகரின் பத்து இடங்களில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 33 கட்டிடங்கள் சேதமடைந்தன.

யுக்ரைனின் எரிசக்தி, தொழில், போக்குவரத்து கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா கூறியுள்ளது.

இதனிடையே, இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்பட்டதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Chirag Duhan காலிறுதிக்கு சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், 6-4, 6-4 என்ற செட்கணக்கில் Pranav Karthik-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

வியட்நாம் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - பிரான்ஸின் Constantin Bittoun இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Atharva Sharma* - ஜப்பானின் *Ryuki Matsuda* இணையை வென்றது.

>>>>>>><<<<<

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Sahaja Yamalapalli* - இங்கிலாந்தின் *Naiktha Bains* . இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>>><<<<<

அஸ்தானா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணிக்கா பத்ரா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>end<<<<<